ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1930/6 - 2015 අගෝස්තු මස 31 වැනි සඳුදා - 2015.08.31

1930/6 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, உள்ளூராட்சிமன்ற (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி ) சட்டம்*

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர்விளைவான சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சிமன்ற (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மாகாணத்தின் உள்ளூராட்சிமன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சராக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி என்னால் தொகுக்கப்பட்ட கீழ் காணப்படும் துணைவிதி சுருக்க வரைவினை மேற் குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் இவ்வாறு அறிவித்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது.

* பிரதேச சபைகளின் செயற்பணிக் குழுவினை ஏற்படுத்தல், கூட்டங்கள் நடாத்துதல் பற்றிய துணைவிதி

* கால அறிக்கை மற்றும் தகவல்களை சமர்ப்பித்தல் பற்றிய துணைவிதி

* தகன நிலையத்தை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணைவிதி

* இறுதிக் கிரியை சேவையினை வழங்கும் நிலையத்தின் நடவடிக்கையினை நிர்வகித்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடலுக்கான துணைவிதி.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய உரிய சட்டத்தின் 69 ஆம் பிரிவு மற்றும் 126 ஆம் பிரிவினால் மேற்கூறப்பட்ட துணைவிதியினை விதிப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சிமன்ற (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி, இந்த தீர்மானிக்கப்பட்ட துணைவிதியினை ஏற்றுக்கொண்டு பின்பற்றுவதற்காக வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஜே. பி. தயாசிரி பத்மகுமார ஜயசேகர,
முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி
மன்றமும் மாகாண நிர்வாகமும், மனிதவளம், கல்வியும் கலாசார
நடவடிக்கையும், காணி, சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை,
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு வழங்கலும் விநியோக அமைச்சரும்,
வடமேல் மாகாணம்.

குருநாகல்,
2015, ஓகத்து 10.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பிரதேச சபை செயற்குழுவினை ஏற்படுத்தல், கூட்டம் நடாத்துதல் பற்றிய துணைவிதி**

1. இந்த துணைவிதி - பிரதேச சபையின் செயற் குழுவினை ஏற்படுத்தல், அவற்றின் கூட்டம் நடாத்துதல் பற்றிய துணைவிதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட செயற்குழுக்கள் மற்றும் பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவதொரு குறித்த அலுவலுக்கான செயற் குழுவினை ஏற்படுத்தல் மற்றும் உரிய செயற் குழுவிற்காக உறுப்பினர்களை நியமித்தல் பிரதேச சபை ஒன்றினால் செயல்படுத்த முடியும் ;

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருத்தல் பிரதேச சபையின் அலுவலாகும்.

(i) நிதியும் கொள்கையினை அமைத்தலும் ;
(ii) வீடும் சமூக அபிவிருத்தியும் ;
(iii) தொழில் நுட்ப சேவை ;
(iv) சூழலும் வசதியும்.

3. மேற்கூறப்பட்ட 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு செயற்குழுக்களின் உறுப்பினர்கள் கீழ் குறிப்பிடப்பட்டவர்களினால் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(அ) பிரதேச சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 1/3 இற்கு குறையாத உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ;

(ஆ) குறைந்த பட்சம் செயற் குழுவிற்கு உரித்தான விடய துறை சம்பந்தமாக திறமையினை காட்டுகின்ற அதிகார பிரதேசத்தினுள் வாழுகின்ற மூவரும் ;

(இ) மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (ஆ) இல் உள்ள எண்ணிக்கையுடன் எடுத்துக்கொண்டால் 25% பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் பிரதேசத்தில் அது பற்றி முயற்சியுடைய மகளிர்களுக்காக அதிகூடிய சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும் ;

(ஈ) 3 (இ) இல் எது குறிப்பிடப்பட்ட போதும் போதியளவிலான மகளிர்கள் இல்லாது விடின் முன்வருகின்ற உறுப்பினர்கள் மூலம் அதனை செய்ய முடியும் ;

4. (அ) 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களை நியமிப்பதற்காக வருடாந்தம் திசெம்பர் மாதம் நடாத்தப்படுகின்ற பொதுக் கூட்டத்தில் அல்லது அதற்கு முன்பு பிரேரணையின் மூலம் தேர்ந்தெடுத்தல் வேண்டும் ;

(ஆ) மேற்கூறப்பட்ட (அ) பிரிவின்படி உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கு இயலாது போனால் அடுத்துவருகின்ற முதலாவது பொது கூட்டத்திலேயே உரிய உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும் ;

(இ) ஒவ்வொரு செயற்குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த உறுப்பினர்களும் கேட்டு விலகியதனால் அல்லது உரிய உறுப்பினர் பிரதேச சபையின் உறுப்பினராகும் போது அவரின் பதவி முடிவடைந்ததனால் அல்லது உறுப்பினர் ஒருவரின் மரணம் அல்லது வேறு ஏதாவதொரு காரணத்திற்காக செயற்குழுவின் உறுப்புரிமை முடிவடைவதனால் ஏற்படுகின்ற வெற்றிடத்திற்காக அந்த வெற்றிடம் ஏற்பட்ட திகதியின் பின் நடாத்தப்படுகின்ற பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தின் போது வேறு ஒரு உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் அந்த சபையின் அலுவலாதல் வேண்டும்.

5. (அ) ஒவ்வொரு செயற் குழுவிற்கும் தலைவர் ஒருவர் இருக்க வேண்டியதுடன் செயற்குழுவின் முதலாவது கூட்டத்தின் போது செயற்குழுவின் உறுப்பினர்களின் வாக்கெடுப்பு மூலம் தலைவர் ஒருவரினை தேர்ந்தெடுத்தல் வேண்டும் ;

(ஆ) செயற்குழுவின் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றவர் பிரதேச சபையின் உறுப்பினராக அந்த சந்தர்ப்பத்தில் பதவி வகிப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) செயற் குழுவின் தலைவர் உரிய பதவியில் இருந்து கேட்டு விலகல் அல்லது மரணமடைதல் அல்லது பிரதேச சபையின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகல் காரணமாக உரிய செயற்குழுவில் அவர் வகிக்கும் தலைவர் பதவி முடிவடைதல் வேண்டியதுடன், உரிய சம்பவத்தின் பின் நடாத்தப்படுகின்ற செயற் குழுவின் முதலாவது கூட்டத்தில் வேறு செயற்குழு தலைவர் ஒருவரினை தேர்ந்தெடுத்தல் செயற் குழுவின் அலுவலாகும்.

6. மேற்கூறப்பட்ட 5 ஆம் பிரிவில் எது குறிப்பிடப்பட்ட போதும், நிதியும் கொள்கையினை திட்டமிடலும் பற்றிய செயற்குழுவின் தலைவர் பதவி கடமை அதிகாரமும் உறுப்புரிமையும் பிரதேச சபையின் தலைவருக்கு உரித்தாதல் வேண்டும்.

7. ஏதாவதொரு செயற் குழுக் கூட்டத்திற்கு உரிய செயற்குழுவின் தலைவர் வருகை தராத போது வருகை தந்துள்ள உறுப்பினர்களிடையே,

(அ) பிரதேச சபையின் உறுப்பினர்கள் வருகை தந்திருந்தால் அவர்களிடையே எந்த ஒரு உறுப்பினர்; அல்லது

(ஆ) அந்தக் கூட்டத்திற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் எவரும் வருகை தராத போது வேறு ஒரு உறுப்புரிமையாளரிடையே வருகை தந்துள்ள உறுப்புரிமையாளரில் பலரின் விருப்பத்துடன் அந்த செயற் குழு கூட்டத்தின் தலைவராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

8. (அ) ஒவ்வொரு செயற் குழுக் கூட்டத்திலும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையிலும் குறைந்தபட்சமானவர்கள் அந்த செயற்குழுக் கூட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்புரிமையாளர்களின் எண்ணிக்கையில் குறைந்த பட்சம் 1/3 இருக்க வேண்டியதுடன், உரிய 1/3 எண்ணிக்கை பூரண எண்ணிக்கையும் அரைவாசியாகும் போது பூரண எண்ணிக்கையும் அரைவாசியிற்கு அண்மித்த மேற்பட்ட எண்ணிக்கையினர் இருத்தல் வேண்டும் ;

(ஆ) ஏதாவதொரு செயற்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்புரிமையாளர் ஒருவர் தொடர்ச்சியாக செயற்குழுக் கூட்டங்கள் 3 இற்கு அறிவிக்காமல் கலந்து கொள்ளாதிருந்தால் உறுப்புரிமையாளரின் உறுப்புரிமை முடிவடைவதற்கு காரணமாவதுண்டு.

9. (அ) எல்லா செயற்குழுக் கூட்டமும் குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்;

(ஆ) அதி விசேட காரணத்திற்காக செயற்குழுக் கூட்டத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் ஒன்றினை நடாத்த வேண்டும் என்று செயற்குழுவின் தலைவர் கருதுவாராயின் அது பற்றி உறுப்பினர்களை அறிவுறுத்திய பின் ஏதாவதொரு மாதத்தில் அழைப்பு விடுக்கலாம் ;

(இ) ஏதாவதொரு கூட்டம் நடாத்துதலினை குறிக்கப்படும் திகதிக்கு குறைந்த பட்சம் 3 தினத்திற்கு முன்பாவது உறுப்பினர்களை அறிவுறுத்தல் செய்ற்குழுவின் செயலாளரின் அலுவலாதல் வேண்டும்.

10. (அ) நிதியும் கொள்கை பற்றிய செயற்குழுவின் செயலாளர் பதவி, பிரதேச சபையின் செயலாளரினால் வகிக்கப்படுதல் வேண்டும். பிரதேச சபையின் செயலாளர் இல்லாத ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் உரிய செயற்குழுக் கூட்டத்தின் செயலாளர் பதவி உரிய பிரதேச சபையின் செயலாளரின் செயலும் கடமையையும் மேற்கொள்கின்ற வேறு உத்தியோகத்தர் ஒருவரினால் வகிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) நிதிக் கொள்கையினை மேற்கொள்வது பற்றிய செயற்குழு தவிர மற்றைய செயற் குழுவின் செயலாளர் பதவி, பிரதேச செயலாளரின் சிபாரிசின்படி பிரதேச சபையின் தலைவரினால் நியமிக்கப்படுகின்ற பிரதேச சபையின் ஏதாவதொரு உத்தியோகத்தரிடத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

11. (அ) ஒவ்வொரு செயற்குழுவின் செயலாளரினால் ஒரு செயற்குழுவின் கூட்டத்திற்கு கலந்து கொண்ட உறுப்பினர்களின் வரவு பதிவேட்டினை கொண்டு நடாத்த வேண்டியதுடன் செயற்குழுவின் நிகழ்ச்சி நிரல் பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்ததாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு செயற்குழுவின் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானம் அடங்கிய அறிக்கை ஒன்றினை கொண்டு நடாத்தல் அந்தந்த செயற்குழுவின் செயலாளரின் செயலாதல் வேண்டும். அதனை மேற்பார்வை செய்தல் பிரதேச சபையின் செயலாளரின் பொறுப்பாதல் வேண்டும். பின்பு கூட்டப்படும் கூட்டத்தின் போது அந்த அறிக்கையினை ஆமோதித்த பின் செயற் குழுவின் தலைவரினால் அதற்கு கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும் ;

(இ) ஏதாவதொரு செயற் குழுவினால் ஏதாவதொரு காரணம் சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற கடைசி தீர்மானம் பிரதேச சபையின் அடுத்த பொதுக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதேச சபையின் தலைவரிடத்தில் முன்வைத்தல் செயற்குழுவின் செயலாளரின் செயலாதல் வேண்டும் ;

(ஈ) ஏதாவதொரு காரணம் சம்பந்தமாக தீர்மானம் எடுத்து நடவடிக்கை செயல்படுத்துவதற்கு செயற்குழுவிற்கு பிரதேச சபையினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு செயல் சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற தீர்மானம் பிரதேச சபையின் தெரிந்து கொள்வதற்காக சபைக்குட்படுத்த வேண்டியதுடன், மற்றைய தீர்மானம் செயல்படுத்துவதற்காக பிரதேச சபையின் அனுமதியினை பெறல் வேண்டும்.

12. ஏதாவதொரு செயற் குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்திற்காக பரிசீலித்துப் பார்ப்பதற்கு தேவையான, சபைக்குரிய கோவை, ஆவணங்கள் மற்றும் பத்திரங்கள் உரிய செயற்குழுக் கூட்டத்திற்கு எடுத்துவரும்படி கூறுவதற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

13. மதிப்பீட்டு வரி விதித்தல், வரி விதித்தல் கட்டணத்தினை குறித்தல், ஏதாவதொரு தொகையினை அறவிடலும், ஏதாவதொரு கடன் பெற்றுக் கொள்ளலுக்கான செயல் தவிர பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள வேறு செயல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் செயற் குழுக்களுக்கு பொறுப்படைக்கலாம்.

14. வாக்கியம் சம்பந்தமாக பொருள் தேவைப்படின், இந்த பகுதியில் துணைவிதியில்,

"செயற்குழு" என்பது, இரண்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குழு ;
"உறுப்பினர்" என்பது, உரிய பிரதேச சபையின் உறுப்பினர் ;
"சபை" என்பது, உரிய பிரதேச சபை ;
"செயலாளர்" என்பது, உரிய பிரதேச சபையின் செயலாளர் அல்லது செயலாளரின் செயலினை அல்லது செயற்பாட்டினை நிறைவேற்றுகின்றவர்.

என்று கருதப்படும்.

இக்கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும்.

**பருவகால அறிக்கையையும் தகவல்களையும் சமர்ப்பித்தல் பற்றிய துணைவிதி**

1. இந்த துணைவிதியில் "மதிப்பீட்டு வரியையும் கட்டணத்தையும் விதித்தல், அறவிடல் மற்றும் பெற்றுக் கொள்ளும் அலுவலுக்காக பிரதேச சபை பிரதேசத்தினுள் காணப்படும் நிலையான சொத்து பற்றி மற்றும் கைத்தொழில் அல்லது வியாபாரம் பற்றி பருவகால அறிக்கை முன் வைத்தல் பற்றிய துணைவிதி" என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. (அ) பிரதேச சபை பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு நிலையான சொத்து கையேற்கப்படும் எல்லோரினாலும், அந்த நிலையான சொத்து கையேற்கப்படும் தினம் தொடக்கம் மூன்று மாதத்தினுள் அந்த நிலையான சொத்து பற்றிய தகவல் பிரதேச சபையில் பதிவு செய்யப்படுவதற்காக இந்த பகுதியின் பிரிவுகளில் முதலாவது உப அட்டவணைக்கு ஒத்ததாக அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் செயலாளரிடத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) மேற்கூறப்பட்ட (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்படும் எவர் ஒருவரினாலும் அந்த விண்ணப்பப்படிவத்துடன் நொத்தாரிஸ் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட கீழ் காணப்படும் பத்திரங்களின் போட்டோ பிரதியை முன்வைத்தல் வேண்டும்.

(i) அந்த சொத்தின் உரிமை உறுதிப்பத்திரம் ;

(ii) அதிகாரம் உள்ள அளவையாளரினால் வரையப்பட்ட அந்த சொத்தின் வரைவு.

(இ) உரிய சொத்தில் உரிமை ஆவணம் மற்றும் அதற்குரிய 14 நாட்களுள் பெற்றுக்கொண்ட உரிய உரிமையை உறுதிப்படுத்தப்படும் உரிமைச் சான்றிதழும் விண்ணப்பப்படிவத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

3. இந்த துணைவிதியில் நடைமுறைப்படுத்தப்படும் திகதியின் போதும் பிரதேச சபை பிரதேசத்தினுள் அமைக்கப்பட்ட ஏதாவதொரு நிலையான சொத்து கையேற்கப்பட்டுள்ள எல்லோரினாலும் இந்த பகுதியில் இடைநிலைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி தொடக்கம் ஒரு வருடம் செல்லும் முன் 2 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

4. (அ) இந்த துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதாவதொரு நிலையான சொத்தினால் தம்மிடத்தில் காணப்படும் ஏதாவதொரு நிலையான சொத்தின் அல்லது அதில் உள்ள கட்டிடத்தினை பயன்படுத்தப்பட்டுள்ள செயலினை திருத்துவதாயின் அந்த திருததியமைக்கப்பட்ட ஒரு மாதத்தினுள் அது பற்றி செயலாளரிற்கு எழுத்து மூலம் அறிவித்தல் நிலையான சொத்து உரிமையாளரின் அலுவலாகும் ;

(ஆ) இந்த துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதாவதொரு -

(i) நிலையான சொத்து சிறு பிரிவுகளாக பிரிக்கும் நிலஅளவையின் போது ;

(ii) நிலையான சொத்தாகிய ஏதாவதொரு காணியில் புதிதாக கட்டிடம் அமைப்பதற்கு முன் ;

(iii) நிலையான சொத்தாகிய ஏதாவதொரு கட்டிடத்தின் பத்திரத்தில் வேறுபாடு செய்யும் முறையில்.

(1) புதிதாக ஒரு பகுதியை ஒன்று சேர்ப்பதாயின்; அல்லது

(2) தற்போது காணப்படும் பகுதியினை உடைத்து வேறுபடுத்துவதாயின் ; அல்லது

(3) தற்போது காணப்படும் பகுதியினை உடைத்து புதிதாக ஒரு பகுதி சேர்க்கப்படுமாயின் அல்லது

(4) பூரண கட்டிடத்தையும் உடைத்து வேறுபடுத்தி வேறு கட்டிடம் ஒன்றை அமைப்பதாயின்,

இதில் ஏதாவதொன்றை அமைப்பதற்கு முன், அதற்காக அனுமதியினை; பிரதேச சபையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(இ) பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதாவதொரு நிலையான சொத்தின் உரிமையாளரின் நிரந்தர முகவரியை வேறுபடுத்தும் சந்தர்ப்பத்தில், அந்த வேறுபாடு செய்யப்பட்ட பதினான்கு தினங்களுக்குள் அது பற்றிய எழுத்து மூல அறிவித்தல் செயலாளரிடத்தில் பொறுப்படைத்தல் அந்த நிலையான சொத்து உரிமையாளரின் அலுவலாவதுடன் அது எழுத்து மூல அறிவித்தல் கிடைத்தவுடன் நிலையான சொத்து உரிமையாளர் பதிவு செய்யப்படும் ஆவணம், அவ்வாறு திருத்தலும் அவ்வாறு திருத்தப்பட்டுள்ளது பற்றி உரிய நிலையான சொத்து உரிமையாளரிற்கு எழுத்து மூலம் அறிவிப்பு விடுத்தல் செயலாளரின் கடமையாகும்.

5. இந்தப் பகுதியில் இடைநிலைச் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்படுகின்ற எல்லா விண்ணப்பப்படிவம் சம்பந்தமாக நிலையான சொத்து உரிமையாளர்களும் அவர்களிடத்தில் காணப்படும் நிலையான சொத்து பதிவு செய்யப்படும் ஆவணம், இது சம்பந்தமாக இரண்டாவது உப அட்டவணையின் படிவத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டு கொண்டு நடாத்தல் செயலாளரின் அலுவலாகும்.

6. (அ) பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நடாத்திச் செல்கின்ற ஏதாவதொரு வியாபாரம் அல்லது கைத்தொழில் அல்லது விற்பனையினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்

சட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் விதிக்கப்படுகின்ற ஏதாவதொரு வரி அல்லது பிரதேச சபையினால் வெளியிடப்படுகின்ற அதிகாரப்பத்திரத்திற்கு அறவிடப்படுகின்ற கட்டணத்தை கணக்கு பார்ப்பதற்காக தேவை ஏற்படுகின்ற உரிய வியாபாரத்தின் அல்லது கைத்தொழிலின் அல்லது விற்பனை நடவடிக்கை நடாத்திச் செல்லும் போது,

(i) ஏதாவதொரு வருட காலத்தினுள் கிடைக்கப்பெற்ற அளவு, அல்லது

(ii) ஏதாவதொரு வருட காலத்தினுள் வியாபார சூழல் கிடைப்பனவு அல்லது

(iii) ஏதாவதொரு வருட காலத்தினுள் ஈட்டப்படுகின்ற இலாபம், அல்லது

(iv) ஏதாவதொரு விற்பனையினால் கிடைக்கப்பெற்ற தொகை அல்லது.

சமாதான நீதவான் ஒருவர் அல்லது சத்திய ஆணையாளர் ஒருவரின் முன்னிலையில் சான்றுப்படுத்தப்பட்ட அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படுமாறு உரிய கைத்தொழிலில் அல்லது வியாபாரத்தில் உரிமையாளர் அல்லது முகாமையாளர் செயலாளரினால் ஆவணத்தினாலான அறிவித்தல் மூலம் கேட்கப்படுதல் முறையானதாகும்.

(ஆ) செயலாளரினால் அனுப்பப்படுகின்ற (அ) பந்தியின் கீழ் அறிவித்தல் விடுக்கப்படுகின்ற எவர் ஒருவரினாலும் அந்த அறிவித்தல் தங்களுக்கு கிடைத்த திகதி தொடக்கம் பதிநான்கு தினங்களுக்குள் அந்த அறிவித்தல் மூலம் கேட்கப்பட்டுள்ள அறிக்கை செயலாளரிடத்தில் வழங்கல் வேண்டும்.

7. இந்த துணைவிதியில் எந்தவொரு பிரிவிலாவது காணப்படும் நியதிகள் அல்லது சட்டமூலங்களை மீறல் அல்லது அத்து மீறல் குற்றச் செயலாகும். இதில் ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக நீதவான் நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்பட்ட பின் உரிய குற்றம் சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு கீழ்ப்படிதல் வேண்டும். அது போன்று ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக பிரதேச நீதவான் நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்டவாறு தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட எவர் ஒருவரினால் அந்த மீறல் அல்லது அத்துமீறல் மீண்டும் செய்யப்படுகின்ற போது மேற்கூறப்பட்ட உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக தண்டனைக்கும் கீழ்படிதல் வேண்டும்.

8. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின் இந்த பகுதியில் இடைநிலைச் சட்டத்தின்,

"முகாமையாளர்" என்பது, இந்த இடைநிலைச் சட்டத்தில் உரிமையுள்ள ஏதாவதொரு சொத்து, வியாபாரம் அல்லது கைத்தொழிலின் சட்ட முறையான உரிமையாளர் அல்லது உரிய உரிமையாளருக்காக முன்னிற்கின்ற வேறு ஏதாவதொரு முகவர் அல்லது உரிய சொத்து அல்லது வியாபாரம் அல்லது கைத்தொழிலின் முகாமைத்துவத்தை கையளிக்கப்பட்டுள்ள ஏதாவதொருவர்,

"நிலையான சொத்து" என்பது, ஏதாவதொரு காணி அல்லது கட்டிடம் ஆகும்.

"சொத்து உரிமையாளர்" என்பது, ஏதாவதொரு நிலையான சொத்தின் தனி உரிமையாளராகிய ஒருவர் அல்லது நிலையான சொத்தின் தனி உரிமையாளருக்கு அதிக அளவில் உரிமையாளர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அந்த ஒவ்வொரு உரிமையாளர்களும் வெவ்வேறாகவும் கூட்டமைப்பாகவும் அந்த சொத்தின் உரிமையாளர் என்று கருதப்படுவதுடன், உரிய காலத்தில் உரிய சொத்து வகிக்கின்ற அல்லது உரிய சொத்தின் பொறுப்பை பொறுப்பேற்ற அல்லது வேறு ஏதாவதொருவர் இதற்கு உள்ளாதல் வேண்டும்.

"செயலாளர்" என்பது, உரிய பிரதேச சபையின் செயலாளராவார்.

"பருவகால அறிக்கை" என்பது, ஆறாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு உரிய காலத்திற்கு உரிய அறிக்கை.

"சபை" என்பது, உரிய பிரதேச சபை.

என்று கருத்தப்படும்.

**முதலாவது அட்டவணை**

*2 ஆம் பிரிவின் (அ) பந்தி*

**......................... பிரதேச சபை பிரதேசத்தினுள் காணப்படும் நிலையான சொத்து பற்றிய தகவல்களை முன்வைத்தல்**

(ஒவ்வொரு சொத்திற்காக வெவ்வேறாக மாதிரிப் படிவம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்)

1. (அ) சொத்து உரிமையாளரின்/உரிமையாளர்களின் பெயர்/பெயர்கள்
1. :..............................................................................
2. :..............................................................................
3. :..............................................................................

(ஆ) சொத்து உரிமையாளரின்/உரிமையாளர்களின் முகவரி (கள்)
1. :..............................................................................
2. :..............................................................................
3. :..............................................................................

(இ) தொலைபேசி இலக்கம் : ....................................................................................
(ஈ) சொத்து அமைந்துள்ள வீதியின் அல்லது கிராமத்தின் பெயர் :..............................................................
(உ) வரிப்பணம் இலக்கம் :.............................................................
(ஊ) சொத்து அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :..................................................
(எ) நிலப்பரப்பளவு ஏக்கர் ..................... றூட் ................... பேர்ச்சஸ் ........................ (ஹெக்டயார்...........)
(ஏ) ஆவணத்தின் இலக்கம் :...........................................................................
(ஐ) நொத்தாரிசின் பெயரும் முகவரியும் :......................................................................................

2. காணி பதிவு அலுவலகத்தின் பெயர்கள்/ஓலை இலக்கம் :..............................................................................

3. (அ) சொத்து, காணியாயின் அதில் ஏதாவது கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை? :.......................... ..........................................

(ஆ) பதில் "ஆம்" எனின் அந்த கட்டிடம், தனி கட்டிடமா இல்லையாயின் தொடராக அமைக்கப்பட்ட கட்டிடமா என்பது பற்றி :.........................................................................................................

4. சொத்தை கையேற்ற திகதி :.........................................................................................................
5. சொத்தை உபயோகித்த காரணம் நிரந்தர வதிவு/வியாபார அல்லது வர்த்தக நோக்கம் .........................................................................................................................................
6. சபையினால் அனுமதிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்தின் இலக்கம் :..................................................................

7. முன்வைக்கப்படும் உரிமைச் சான்றிதழ்.

(அ) திகதி :........................................................
(ஆ) நொத்தாரிசின் பெயர் :.........................................................
(இ) நொத்தாரிசின் முகவரி :.........................................................

திகதி : 20....................................................

.

...............................................................................
சொத்து உரிமையாளரின் கையொப்பம்.

## இரண்டாவது அட்டவணை

5 ஆம் பிரிவு

...................................................... **பிரதேச சபை**

நிலையான சொத்தை பதிவு செய்யும் அட்டவணை

| பதிவு செய்யப்பட்ட திகதி | | சொத்து உரிமையாளர்கள் | | சொத்து அமைந்துள்ள வீதி/கிராமம் | வரிப்பண இலக்கம் | கி. நி. பிரிவின் இலக்கமும் பெயரும் | காணியின் அளவு (ஹெக்டெயார்) | உறுதியின் இலக்கம் | காணி பதிவு அலுவலகத்தின் பெயரும் பத்திரத்தின் இலக்கமும் | நொத்தாரிசின் பெயரும் முகவரியும் | காணியா இல்லையாயின் | கட்டிடமாயின் அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கம் | முன்வைக்கப் படும் உரிமைச் சான்றிதழ் | | | சொத்தை கையேற்ற திகதி | சொத்தை உபயோகிக்கும் காரணம் | வி. பொ. உ. கையொப்பம் | செயலாளரின் கையொப்பமும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடமும் திகதியும் | இலக்கம் | பெயர்/பெயர்கள் | நிரந்தர முகவரி/முகவரிகள் | | | | | | | | | | திகதி | நொத்தாரிசின் பெயர் | நொத்தாரிசின் முகவரி | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(**க.கொ.** - பதிவேட்டில் இடது பக்கத்தினையும் வலது பக்கத்தினையும் உபயோகத்திற்கு எடுத்து தகவல்களை பதிவதற்கு நிரல்களின் அளவினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்)

**மக்கள் சுகாதாரத்திற்கு நன்மை பயக்கும் வகையில் தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணைவிதிகள்**

1. இப்பகுதியின் துணைவிதிகள் பிரதேச சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தகன நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. இந்த இடைநிலைச் சட்டத்தினால் ஏதாவது அறிவிக்கப்பட்டாலும் 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது அடக்கஸ்தளம் மற்றும் தனியாள் அடக்கஸ்தளம் பற்றிய அதிகாரச் சட்டத்தில் உள்ள சட்ட திட்டங்களுக்கு பொறுத்தமற்றதாகும்.

3. (அ) தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலையும் தகனம் செய்யப்படுதல் ஆகாது;

(ஆ) இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அத்தகைய நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது ;

(இ) இறந்துபோன எவரினதும் மரண சான்றிதழின் 7 ஆவது நிரலில் ''மரணத்திற்கான காரணம் அடக்கம் செய்யப்பட்ட அல்லது தகனம் செய்யப்பட்ட இடம்'' என்பதில், பிரதேச சபையின் ஏற்புடைய தகன நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது ;

(ஈ) தலைவர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் வருடாந்தம் தமது அதிகாரப் பிரிவினுள் நடாத்தப்படும் தகனம் செய்யப்படும் இடமும் அதன் முகவரியும் காட்டப்படும் அட்டவணையை மாவட்ட செயலாளரிடத்தில் முன்வைத்தல் வேண்டும்.

4. (அ) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் பிரதேச சபையின் பிரேரணை வழிமொழிதல் மூலமாக விதிக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான பிரேரணை வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்வது சட்டமாகும் ;

(ஆ) மேலே (அ) பந்தியின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு தகன நிலையத்தை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் தகன நிலையத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும் ;

(இ) சடலம் ஒன்றை எரிப்பதற்கு அறவிடும் கட்டணம் இங்கு முதலாவது உப அட்டவணையில் காணப்படும் வண்ணம் விதிக்கப்படுவது சட்ட ரீதியானதாகும்.

5. 3 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இதனகத்துப் பின்னர் ''விண்ணப்பதாரி'' என அறியப்படும்) எவரேனும் ஆள், இங்கு கீழே காட்டப்பட்டுள்ள பதிவேட்டுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) விண்ணப்பதாரியின் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ;

(i) விண்ணப்பதாரியின் தேசிய ஆளடையாளட்டை, அல்லது

(ii) விண்ணப்பதாரியின் சாரதி உரிமப்பத்திரம், அல்லது

(iii) விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டு என்பவற்றில் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) இறந்தவரின் மரணச்சான்றிதழ் அல்லது பிறப்புச் சான்றிதலும் மரணத்தினைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின்41 -1 (ஆ) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மரண அறிவித்தல் அல்லது கிராம அலுவலரினால் வழங்கப்படுகின்ற B - 24 படிவம்.

(இ) மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருந்தால், அத்தகைய விசாரணையை நடாத்திய நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 41 (உ) பந்தியின் கீழ் பூதவுடலைத் தகனம் செய்ய அனுமதியளித்து வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்து பிறந்த சடலமாயின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் 43 (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் அத்துடன்

6. பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பத்திரத்தின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெறும் வரிசைக் கிரமத்திற்கமைய இங்கு மூன்றாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தல் தலைவரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும். இப்பதிவேடு விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் பிரதேச சபை அலுவலகத்தால் பேணப்படுதல் வேண்டும்.

7. (அ) சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய 3 ஆவது பிரிவின் சட்டதிட்டங்களுக்கு எதிர்மாறாக அமையாதவாறு ஏதேனும் பூதவுடல் தகனம் செய்வதற்குப் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்படுமாயின், 3 ஆவது துணைவிதிக்கமைய விதிக்கப்பட்ட உரிய கட்டணத்தை அறவிட்ட பின்னர், தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அதற்கான அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்கு அமைய தகனம் செய்வதற்குரிய பூதவுடல் தகன நிலைய பொறுப்பாளரிடம் கொண்டுவந்து பொறுப்பிக்க வேண்டிய தினம் மற்றும் நேரம் அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள் பூர்த்தியாகாத சந்தர்ப்பத்தில் எரிப்பதற்காக சடலம் ஒன்றை பொறுப்பேற்காவிடின், தலைவர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தரினால் அதற்குரிய காரணத்துடன் அது பற்றி விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியிடத்தில் எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

8. (அ) வாரத்தின் எல்லா நாட்களிலும் முற்பகல் 7.00 மணியிலிருந்து பிற்பகல் 7.00 மணி வரை தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்க முடியும். பூதவுடலினை எரிப்பது பற்றிய நேரத்தினை பிரதேச சபைகளினால் காலத்திற்கு காலம் தீர்மானிப்பது சட்டரீதியானதாகும் ;

(ஆ) சடலம் எரிக்கும் சூழலில் முதலில் தெரியும் இடத்தில் எரிக்கும் நேரங்களை நேரசூசியை தினமும் காட்சிக்கு வைத்திருத்தல் வேண்டும்.

9. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பூதவுடலை தகன நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தகைய நேரத்தில் பூதவுடலைக் கையளிக்க தாமதம் காரணமாக விண்ணப்பதாரி அல்லது மரணமடைந்தவரின் உரிமையுள்ள வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் வசதியீனம் அல்லது நட்டம் சம்பந்தமாக பிரதேச சபை, தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பொறுப்புக்கு கட்டுப்படல் ஆகாது.

10. ஒவ்வொரு தகன நிலையத்திலும் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு பூதவுடல் தொடர்பாக நாலாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேடொன்று தகன நிலையத்தின் பொறுப்பாளரால் பேணப்பட்டுவருதல் வேண்டும்.

11. (அ) ஏதாவதொரு சடலத்தை எரித்த பின் உரிய சடலத்தின் அஸ்தியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரி நினைப்பாராயின் அது பற்றி இரண்டாவது உப அட்டவணையில் குறிப்பிட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சடலத்தை எரிப்பதற்காக ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் அஸ்தியை இடுவதற்காக போதிய அளவிலான பாத்திரத்தை தகன நிலைய பொறுப்பாளரிடத்தில் வழங்கள் விண்ணப்பதாரியின் அலுவலாதல் வேண்டும். எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம்பெற்ற பிரதிநிதியால் அத்தகைய பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும் ;

(ஆ) எனினும் விண்ணப்பதரியின் எழுத்திலான வேண்டுகோளின் பேரில் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகைய அஸ்தியை தகன நிலையத்தின் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துககொள்ளும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும். இவ்வாறு நீடிக்க இயன்ற கால எல்லை ஏழு தினங்களாகும் ;

(இ) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது தகன நிலைய பொறுப்பாளரினால் தகன நிலையத்தில் காணப்படும் குளியிலிடல் சட்டரீதியானதாகும்;

(ஈ) எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம்பெற்ற பிரதிநிதியால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளாகத்தினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் பணியாதல் வேண்டும் ;

(உ) எந்த பூதவுடலின் அஸ்திக்கான விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியிடம் தவிர வேறு எவருக்கும் வழங்கலாகாது.

12. (அ) ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆள் உட்பிரவேசித்தல் ஆகாது;

(ஆ) தலைவர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி ஏதேனும் தகன நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது ;

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும்,-

i பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஆள் அனுமதிப்பத்திரத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து, பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரம்பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் ; அத்துடன்

ii தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர், அனுமதிப்பத்திரம் பெறுநரின் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள்.

தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களும் எனக் கருதப்படல் வேண்டும்.

13. ஏதேனும் தகன நிலைய வளவினுள் :-

(அ) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல் ;

(ஆ) தகன நிலைய வளவினுள் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல் ;

(இ) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல் ;

(ஈ) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல் ஆகாது.

14. (அ) பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகன நிலையத்தைப் பராமரித்துக் கொண்டு நடாத்துதலும் தலைவரின் பணியாதல் வேண்டும் ;

(ஆ) ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் பிரதேச சபையின் பணியாதல் வேண்டும்.

(இ) ஏதாவதொரு தகன நிலையத்தில் தகனம் செய்வதற்காக பொறுப்பேற்கப்பட்ட பூதவுடலினை பூரணமாகவே தகனம் செய்வதற்கு இயலாது போகும் வகையில் தகன நிலையம் செயலிழக்கும் சந்தர்ப்பத்தில் உரிய பூதவுடலினை விறகுகளை உபயோகித்து தகனம் செய்தல் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப பூதவுடலில் எஞ்சிய பகுதியினை அடக்கஸ்தளத்தில் அடக்கம் செய்வதற்காக தவிசாளரினால் எடுக்கப்படும் தீர்மானம் சட்டரீதியானதாகும். அதற்காக உரிய தகன நிலைய சூழலில் போதியளவிலான செயற்பாடுகளை ஏற்படுத்தி கொள்ளல் பிரதேச சபையின் பொறுப்பாகும் ;

(ஈ) தகுதியுடைய ஒருவரினால் பூதவுடலினை தகனம் செய்வதற்கு செலவாகின்ற எரிவாயு (கேஸ்) அளவு பற்றி அறிவித்தல் ஒன்றினை காட்சிப்படுத்தல் வேண்டும் ;

(உ) எரிப்பதற்கு செலாவாகின்ற எரிவாயுவின் அளவினை கவனிப்பதற்காக மீற்றர் ஒன்றினை பொறுத்தல் வேண்டும் ;

(ஊ) தகன நிலையத்தின் தரம் பற்றி தகுதியுடைய ஒருவரிடத்தில் அறிக்கை ஒன்றினை காலத்திற்கு காலம் பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாகும்.

15. புதிய தகன நிலையத்தை அமைப்பதற்கு முன் மாகாண சூழல் அதிகார சபையினால் வழங்கப்படும் சான்றிதழ் தெளிவானதாகவும் தகன நிலையத்தை நடாத்திச் செல்வற்காக வருடாந்த சூழல் பாதுகாப்பு அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்வதும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தகன நிலையத்திற்காக பிரதேச சபையினால் இந்த துணைவிதி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் உள்ள வருடம் தொடக்கம் சூழல் பாதுகாப்பு அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

16. இந்த பிரிவுகளில் எந்தவொரு அல்லது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது சட்டதிட்டங்களை மீறல் அல்லது அத்துமீறல் குற்றமாகும். அதில் ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக நீதவான் நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் அந்த குற்றம் சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும். அது போன்று அதில் ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக பிரதேச நீதவான் நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட வண்ணம் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட எவர் ஒருவரினால் அதனை மீறல் அல்லது அத்து மீறல் தொடர்ந்து செய்து கொண்டு செல்கையில் மேற்கூறப்பட்ட உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

17. வாக்கிய சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் இடைநிலைச் சட்டங்களில்,

"தகன நிலைய கூடம்" என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக்கூடமும்.

"தகன நிலைய வளவு" என்பது, முழு தகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும்.

"தகன நிலையத்தின் வெப்ப நிலை" என்பது, பிணம் எரிக்கும் அறையினுள் ஆகக்கூடிய வெப்பம் செல்சியஸ் 800 டிக்ரி இல் இருத்தல் வேண்டியதுடன் சடலம் எரியும் சந்தர்ப்பத்தில் செல்சியஸ் 1000 டிக்ரி வரை இருக்க வேண்டிய வெப்ப நிலையாகும்.

"தகன நிலையத்தின் சூழல்" என்பது, பூரண சுடுகாடும் மற்றும் அதற்குரிய நிலப்பரப்பு.

"தகன நிலையத்தின் பொறுப்பாளி" என்பது, அப்போதைக்கு...........[2] சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் ஊழியர்.

"விண்ணப்பதாரி" என்பது, சடலமொன்றை எரிப்பதற்காக தலைவரிடத்தில் விண்ணப்பிப்பவர்,

"அதிகாரமுள்ள உத்தியோகத்தர்" என்பது, உரிய அலுவலுக்காக தலைவரினால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் உத்தியோகத்தர் ஒருவர்.

"அஸ்தி" என்பது, ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர், பூதவுடலினதும் அது வைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும்,

"பூதவுடல்" என்பது, மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழுப் பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடலும் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகமும்,

"தலைவர்" என்பது, உரிய பிரதேச சபையின் தலைவர்.

"சபை" என்பது, உரிய பிரதேச சபை ஆகும்

எனக்கருதப்படல் வேண்டும்.

18. இத்துணைவிதியில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின் சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும்.

**முதலாவது அட்டவணை**

4 ஆம் பிரிவு

**தகன நிலையத்தை உபயோகிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள்**

| | **கட்டணங்கள் அறவிடப்படுகின்ற முறைகள்** | | பெறுமதி ரூபா. சதம் |
|---|---|---|---|
| 1. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | - | .................... |
| 2. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | - | .................... |
| 3. | அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வதியும் வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | - | .................... |
| 4. | அதிகாரப் பிரதேசத்தில் வெளியே வதியும் வயது வந்த ஒருவரல்லாதவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | - | .................... |
| 5. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் சமூர்த்தி பெறுநர் குடும்பத்தைச் சார்ந்த வயது வந்த ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | - | .................... |
| 6. | அதிகாரப் பிரிவில் வசிக்கும் பிரதேச செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர் ஒருவரின் குடும்பத்தில் இல்லாத முதியவர் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | - | .................... |

